உ

கடவுள் துணை.

திருப்போரூர்

ஆறுமுகசுவாமிபேரில்.

அலங்கார ஆசிரியவிருத்தம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

27

கடவுள் துணை.

ஆறுமுகசுவாமிபேரில்

அலங்காரவிருத்தம்.

சந்திரமுருகாநல்ல தந்திரமுருகா ஞானசற்குரு நாதமுருகா, காரிமுருகாவறுமை தீருமுருகாசுவாமி சச்சிதாநந்தமுருகா, சுந்திரமுருகா மயிலுகந்தமுரு காஎங்கள் சூரசங்காரமுருகா, சோதிமுருகா ரத்ன வேதிமுருகா நிதந்தேவர்கடுதிக்குமுருகா, மந்திரமு ருகா என்முன்வந்துமுருகா வரந்தந்து காத்தருளு முருகா, வாருமுருகாகிருபைபாருமுருகா உன்றன் மைந்தனேக்காருமுருகா, அந்தமுருகா சத்திமைந்த முருகாயெங்கு மழகானநீதிமுருகா, ஆறுமுருகா குறைதீருமுகாபழனி ஆனந்தமானமுருகா. 1

செய்யமுருகா வீராறுகையுமுருகா சேவர் செல்வனுய்வந்தமுருகா, செட்டிமுருகா தங்ககட்டி முருகா குலதேவாதிதேவர்முருகா, மெய்மைமுரு கா மயிலேருமுருகா செய்கதீவினைதீர்க்கு நல்லமுரு கா, வேலுமுருகா வெள்ளையாளுமுருகா சிஷர்வே ண்டுமெரமீயுமுருகா, தையன்மூருகா அம்பும்பெயயு முருகா கல்வி சகலமலேயோதுமுருகா, ஐயமுருகா சோதி வையமுருணவீர அக்ரகரைவென்றமுருகா, ஆறுமுருகா உன்பொன்னுமுருகாதியுன்னேமுருகா சென்னிமுருகா மெய்சொன்னமென்கலியெலாம் தீர்

த்தமுருகா காந்திமுருகா தணிகைவாழ்ந்தமுருகா சிவகைலாசநின்றமுருகா மன்னர்முருகா வேங்கை மரமாக மயிலுமறுகாமொழி குயிலுமருகாதேவர் மகிழுஞ் சங்கீதமுருகா, அன்னமுருகா பஞ்சவர்ன முருகா வுந்தமடியவர்க்குதவுமுருகா ஆறுமுருகா. 2

பொன்னுமுருகா பாதுகாக்குமுருகா திருப்புகழோதியுன்னைமுருகா போற்றுமுருகா வனம்காத்த வள்ளிபொற்புயமணைந்தமுருகா கன்னிமுருகா மெய்சொன்னமுருகா வெனகலியெலாந்தீர்த்தமுருகா காந்திமுருகாசணிகை வாழ்ந்தமுருகா சிவகைலாசநின்றமுருகா மன்னர்முருகா பணிமின்னமுருகா வேங்கைமரமாகநின்றமுருகா மயிலுமுருகா மொழி குயிலுமுருகா தேவ மகிழுஞ் சங்கீதமுருகா அன்னமுருகா பஞ்சவர்னமுருகா வுந்தனடியவர்க்குதவு முருகா ஆறுமுருகா. 3

செம்மைமுருகா நம்மைகாக்கமுருகா விருது சேவலங்கொடியுமுருகா செல்வமுருகாநயினியநல்ல முருகா வெங்குஞ்சோதிய யநின்றமுருகா நன்மை முருகா லோகநன்மைமுருகா திருநாரணன்மருமுருகா ஞானமுருகா அரிதானமுருகா திவ்யநாகமணியானமுருகா வண்மைமுருகா வெனக்குண்மைமுருகா வரமகிழ்ந்தருள்தாருமுருமா வாலமுருகா நீறு பாலமுருகா ஆனைமுகவனுககிளையமுருகா அம்மை

முருகா வள்ளியம்மைமுருகா யெந்தன்வேதனை யறுக்குமுருகா ஆறுமுருகா. 4

சாரிமுருகா வித்தையுரைசெய்யுமுருகா யிது சமயம் வரமருளுமுருகா சத்திமுருகா உமையாள் பெற்றமுருகா விந்ததரணிபுகழோதுமுருகா கௌரிமுருகாநல்ல சரவணமுருகா யெந்தன் சிலேசமுந் தீருமுருகா கீர்த்திமுருகாசிறை மாற்றுமுருகா மனத்துக்கேற்றவரமீயுமுருகா கவனமுருகா உந்தன் தயவுமுருகா யென்னைக் கடைத்தேறப்பாருமுருகா காசிமுருகாமுன்னில் பேசுமுருகா வீரகபாலபர்ல சூலமுருகா அருணிமுருகா லோபபழனிமுருகா தேவர்க்கருண்மயானந்தமானமுருகா ஆறுமுருகா. 5

தெள்ளுமுருகா குறைசொல்லுமுருகா செவியில் கேட்கவிலையோவென்றனமுருகா தெனுமுருகா வரவேணுமுருகா மயில்தெரிசனந் தாருமுருகா வள்ளல்முருகா பொன்னுவள்ளிமுருகா சரணம் வந்துகாத்தருளுமுருகா வாய்ந்தமுருகா நிதமபோற்றமுருகா ஒருமரமாயிரங்கைமுருகா சொல்லுமுருகா சத்திசொல்லுமுருகா வொளிதங்கநவரத்னமுருகா சோலைமுருகா வடிவேலுமுருகா வேண்டிதொழுதவர்க்கருளுமுருகா அல்லுமுருகாபகல் நல்லமுருகாசாமி ஆநந்தகவிக்குதவுமுருகா ஆறுமுருகா குறைதீருமுருகா பழனி ஆனந்தமானமுருகா. 6

ஆறுமுகத்துக்கு-சு-விருத்தம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ஆறுமுகசுவாமிபேரில்

ஆசிரிய விருத்தம்.

ஆறுமுகம் பன்னிரண்டு கையும்வேலும் அலங்காரவாயர மணிந்தமார்பும் திருமுகமும் வெண்ணீறும் புனைந்தமெய்யும் செகமெலாம் புகழ்படைத்த சுப்ரமணியா முருகா சரவணபவனே கார்த்திகேயா முக்கணனுர்புத்திரனே உக்ரவேலா இருவருமே யுனைப்பணிந்தோம் பழனிவேலா யிதுசமயமடியாரை ரட்சிப்பாயே. 1

மயிலேறிவிளையாடுஞ்சுப்ரமணியா வடிவேலா வுன்பாதம் நம்பினேனே உயிரிழந்து அபகீர்த்தியாகும்வேளை உன்செயலாலிதுசமயம் உயிரைக்காத்தாய் தயவாக வினிமேலும் உயிரைக்காத்துச் சண்முகமே அடியாரைத்துபரந்தீர்ப்பாய் வைபோகமானமலை பழனிவேலா வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 2

வருந்துமடியாருயிரைக் காக்குந்தெய்வம் வையகத்தில் வேறொருவரில்லையென்று அறிந்துநான் உனைப்பணிந்தேன் சுப்ரமணியா ஆதரித்துப்பிராணபயம் தீருமையா திரிந்தலைந்து அறுமுனு திங்களாகச்சிறை யிருந்துனைப்பூண்டி சின்னமானேன்

பறந்துவரு மயிலேறும் பழனிவேலா பரயுகயுயிர் காத்து ரப்சிப்பாயே. 3

பெருவேங்கைபுலிபிடித்த பசுவைப்போல பி துர்கலங்கி மனந்தளர்ந்து பலம்பினோமேயிருவருமே உனேக்கூவச் செவிகேளாதோ விதுசமயந்தரவசமா யிருக்கலாமோ குருவாகித் தந்தைதாபநீயோகில் குமரேசாபிரரணபயந் தீருமையா முருகேசாவிது சமயம் பழனிவேலா முள்வந்துஉயிர்காத்து ரட் சிப்பாயே. 4

பாம்பின்வான் சிக்கியதோர் தேரைப்போலப் பதைபதைத்துவாடுகிறோம் பாலர்நாங்கள் தேம்பி யே புயம்புகிறோம் துயரமாகித் தென்னவனே யுன் செவிக்குச் கேளாதோதான் நான்புவியிலுன்னேநம் பி மகிழ்ந்திருந்திருந்தேன் நாயனுக்கதிவர நியாய மோதான் சாமசிவன் புத்திரனே பழனிவேலா சமய மிது உயிர்காத்து ரட்சிப்பாயே. 5

அலேயிலகப்பட்ட உயிரதுபோல்மயங்குகிறோ மே வடிவேலாவிதுசமயந் துயரந்தீர்ப்பாய் கொலே கனவு பாதங்கள்போ யிருந்ததெல்லாம் கொடும்பழி சள் வஞ்சனேபில்லிசூனியமெல்லாம் தொலேயாத சிலுபிணிநோய் விணேகளெல்லாம் துரத்துமையா ம யிலேறும் சுப்ரமண்யா மலேயிலுறைவாசனே பழனி வேலா வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 6

நாகமது கெருடனைக்கண் டலைந்தாற்போல நான் பயந்து அலைதுரும்பாய் அலையுறேனே தாகமதுதீரு மையா தவிக்கும்வேளை சண்முகமேயிது சமயம் அடியேனுக்கு மேகமது பயிர்க்குதவி செய்தாற்போலே வேலவனே பிராணபயந் தீருமையா வேகமுடன் வரவேணும் பழனிவேலா வினை தீர்த்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 7

பூனைகையில் சிக்கியதோர் கிளியைப்போலப் புலம்புகிறேம் பிராணபயமிகவமாகி நானடிமையும் மை நம்பி யிருக்கும்வேளை நாயகனே பராமுகமாய்ப் பார்க்கலாமோ மானீன்றவள்ளியம்மை தெய்வானை மணவாளா சரவணனே கருணைசெய்வாம் கானமயில்வாகனனே பழனிவேலா கடவுளேஉயிர்காத்து ரட்சிப்பாயே, 8

தூண்டிலகப்பட்ட உயிரதுபோல் துடிக்கிறேனே சுப்ரமணியா விதுசமய மடியனுக்கு வேண்டுவரங்கொடுப்பதற்குப் பார்த்துநீயே வேறொருவரில்லையென்று நம்பினேனே மீண்டுவரும்வினை தூர்த்து துயரந்தீர்ப்பாய் வேலவனே சூரசம்மாசசங்காரவேலா, ஆண்டவனே யுனைப்பணிந்தேன் பழனிவேலா அடியார்களுயிர்காத்து ரட்சிப்பாயே. 9

நஞ்சுபட்டுவிஷமேறி மயங்குமாபோல நடுநடுங்கி கிடுகிடென்று பயந்துநாங்கள் தஞ்சமென்றே

யுனைப்பணிந்தேன் திருத்தணிகைவரசா சற்குருவே பிராணபயந் தீருமையா பஞ்சதனைச் சிறைவிடுத்து த்தலையைவாங்கிப் பாதகத்தைப்பரிகரித்து பதமே தந்து வஞ்சனைகள்செய்யாமல் பழனிவேலா வரமளி த்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 10

அத்திமுகனே முக்கண்ணனுக்கிளையவேலா அறுமுகனே தணிகையிலே அமர்ந்தவசா வித்திறத் திற் பேசாதமூடனானும் வேலவனே நினருளால் கவியைப்போலே, பக்துமேபதிகமாய்ப் பாடிச்சொ ன்னேன் என்மீதில்பிழைகள்மனம் பொறுத்தே யாள்வாம், சத்தியமா யுனைப்பணிந்தோம் எங்களை மா சண்முகனே யடியாரை ரட்சிப்பாயே. 11

ஆறுமுகசுவாமிபேரில் ஆசிரியவிருத்தம்

முற்றிற்று.